# பியகம பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2013 சனவரி 29 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட எனது அறிக்கையில் காண்பிக்கப்பட்ட கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பியகம பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் பௌதீக இருப்புக் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு இருப்புப் பெறுமதி உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் களஞ்சிய இருப்புப் பதிவேட்டு மீதியை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் கடன்கொடுத்தோரின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகையில் மீளாய்வாண்டிற்காகச் செலுத்தப்பட்டதை அடுத்து ரூபா 1,666,856 தொகையான மிகை ஒதுக்கம் காணப்பட்டது.

(இ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு வருமான ஆணையாளருக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 5,168,461 தொகையான பெறுமதி சேர் வரிக்காக மீளாய்வாண்டின்

கடன்கொடுத்தோரின் கீழ் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதேச சபையின் தலைமை அலுவலக மற்றும் உப அலுவலகக் கட்டிட நிர்மாணிப்பு மற்றும் சேர்ப்பனவுகளுக்காக 10 சந்தர்ப்பங்களின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 1,853,107 தொகையான மூலதனச் செலவினங்கள் காணி, கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வடுவேகம சியம்பலாபேயிலுள்ள தெலம்புகஹவத்தை எனும் பெயர்கொண்ட ஏலமிடப்பட்ட காணியின் பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 750,000 தொகையான காணித் துண்டுகள் காணி மற்றும் கட்டிடப் பெறுமதிகளுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 உப அலுவலகங்களில் சேகரிப்புக் கணக்குகளில் சேர்ந்திருந்த ரூபா 2,973,157 தொகையான மீதி கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 19,869,149 தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தன.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 11,461,930 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 14,224,819 ஆக இருந்தது.

## 2.2 நிதி நிர்வாகம்

(அ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காசேட்டின் மறை மீதி ரூபா 2,318,849 ஆகக் காணப்பட்டதுடன் ஆண்டின் இறுதியிலான மறை மீதி ரூபா 5,069,542 ஆகக் காணப்பட்டது. இந் நிலை சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் முற்கொடுப்பனவு மீதி ரூபா 18,583,420 ஆகக் காணப்பட்டதுடன் இதில் மூன்று வருடங்களுக்கு மேலான ரூபா 18,390,609 தொகையான முற்கொடுப்பனவு மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது. இத்தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 2003 இற்கு முன் செலுத்தப்பட்ட முற்கொடுப்பனவு தொடர்பாக கொடுப்பனவு செய்யப்பட்ட திகதி, கொடுப்பனவைப் பெறுபவரின் பெயர் மற்றும் முற்கொடுப்பனவுப் பதிவேடு என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கு உரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டவை | உள்ளபடியானவை | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 30,130 | 24,234 | 18,473 |
| (ii) | குத்தகை வாடகை | 4,571 | 4,450 | 2,784 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,204 | 2,037 | 4,217 |
| (iv) | ஏனைய வருமானம் | 7,423 | 5,097 | 10,521 |

### 2.3.2 முத்திரை வரி

மாகாண சபைப் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்தும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியதாகக் காணப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 12,069,715 ஆகக் காணப்பட்டது.

## 2.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

கம்பஹா மாவட்ட விலைக் குழுவின் விலைகளின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 வரை கம்பஹா மாவட்டத்தினுள் மண் கியூப் ஒன்றின் விலை ரூபா 1,600 தொகைக்கு வழங்கப்படக்கூடியதாக இருக்கையில் மண் கியூப் ஒன்றிற்காக ரூபா 1,900 படி செலுத்தப்பட்டு மீளாய்வாண்டின் போது 588 மண் கியூப்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் மண் கியூப் ஒன்றிற்கு ரூபா 300 படி ரூபா 176,400 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.5 குப்பை அகற்றல் செயற்திட்டம்

2011 யூன் மாதம் முதல் கைவிடப்பட்டிருந்த கற்குழி ஒன்றிற்குள் குப்பைகளை அகற்றுவதற்காக எடுக்கப்பட்டிருந்த சபைத் தீர்மானத்தின் பிரகாரம் சபையால் குப்பைகளை அகற்றும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 19,790,200 தொகையான வருடாந்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட முன்னர் குப்பை அகற்றலுக்காக வருடாந்தம் ரூபா 15,600,000 தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. சிறிது காலத்தின் பின்னர் கற்குழி நிரம்பியதையடுத்து குப்பை அகற்றுவதற்காக அது நீண்டகாலத் தீர்வாகவும் தென்படவில்லை.

மேலும் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வருடாந்தம் சேர்க்கப்படும் குப்பை கூளங்களின் அளவு எவ்வளவு என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு கணக்கிடப்படாதிருந்தமையால் செயற்திட்ட ஆயுட் காலம் அவதானிக்கப்பட முடியாதிருந்தது.

(ii) செயற்திட்ட மதிப்பீட்டிற்காக கடந்த மூன்று ஆண்டுகளின் குப்பைகளை அகற்றுவதற்காக செலவிடப்பட்ட செலவினங்கள் வெவ்வேறாகக் காண்பிக்கப்பட்டிராமை.

(iii) குப்பைகளை அகற்றுவதற்காக தனியார் துறையினரிடமிருந்து 05 உழவு இயந்திரங்களும் சிறிய ஸ்கவேடர் இயந்திரமொன்றும் வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டு வருடாந்தம் செலவிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அத் தொகையில் சபைக்கு புதிதாக 03 அல்லது 04 உழவு இயந்திரங்களோ அல்லது ஸ்கவேடர் இயந்திரமொன்றோ ரூபா 9,090,000 தொகைக்குப் பெற்றுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் தொடர்பாகக் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) 2011 யூன் முதல் நவம்பர் வரை 588 மண் கியூப்களும் குப்பை அகற்றப்படுவதற்காக பயன்படுத்தப்பட்டதாகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவற்றை உறுதிப்படுத்துவதற்கு அளவீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிராமையால் 588 மண் கியூப்களும் பயன்படுத்தப்பட்டமைக்கான சான்றுகள் இருக்கவில்லை.

## 2.6 டெங்கு ஒழிப்புச் செயற்திட்டம்

பிரதேச சபை அதிகார எல்லைக்குள் டெங்கு நோய் ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக 40 ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் அவர்களுக்குக் கொடுப்பனவாக 2010 மே முதல் நவம்பர் வரை ரூபா 2,371,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்திட்டம் 02 மாதங்களிற்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 2011 திசெம்பர் வரை செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரம் இன்றி 2010 மே, யூன், யூலையில் ரூபா 1,060,800 தொகையும் 2011 சனவரி முதல் மே வரை ரூபா 407,550 தொகையும் படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) ஒவ்வொரு மாதத்தின் போதும் ஊழியர்கள் பயன்படுத்தப்பட்ட நாட்களுக்கு மேலாக படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| **மாதம்** | **டெங்கு செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நாட்கள்** | **கொடுப்பனவுகள் செலுத்தப்பட்ட நாட்கள்** |
|---|---|---|
| 2010 மே | 12 | 25 |
| யூன் | 07 | 25 |
| ஆகஸ்ட் | 08 | 25 |
| செப்தெம்பர் | 10 | 25 |
| ஒக்டோபர் | 09 | 25 |

(ஈ) செயற்திட்டத்தின் வருடாந்த மதிப்பீட்டுச் செலவினம் ரூபா 830,000 ஆகக் காணப்பட்டதுடன் 2011 மே முதல் நவம்பர் வரை சம்பளங்களுக்காக மாத்திரம் செலவிடப்பட்ட தொகை ரூபா 2,371,200 ஆகக் காணப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உள்ளகக் கணக்காய்வு
(ஆ) கணக்கீடு
(இ) வருமான நிர்வாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) இருப்புக் கட்டுப்பாடு